# பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை

**(வர்த்தக வணிகம் மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சு)**

# பதவி வெற்றிடம்

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையில் நிலவும் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## 01 பணிப்பாளர் நாயகம் பதவி (HM 2-1) – (01 பதவி)

**வேலை விவரம்:**

பணிப்பாளர் நாயகம் என்பவர் இந்த அதிகார சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரி ஆவார் பணிப்பாளர் சபையின் பொது வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் அதிகார சபையின் அனைத்து செயல்பாடுகள் மற்றும் நிர்வாக மற்றும் நிதி விவகாரங்களுக்கு பதிலளிக்கக் கூடியவர் மற்றும் பொறுப்பானவர் ஆவர். அவர் சபையினால் வழங்கப்படக்கூடிய சபையின் அதிகாரங்கள், செயல்பாடுகள் மற்றும் கடமைகளை செயல்படுத்தவும், மேற்கொள்ளவும் மற்றும் நிறைவேற்றவும் வேண்டும், மற்றும் சிறந்து விளங்குவதற்கு அதிகார சபையின் ஊழியர்களுக்கு தலைமை தாங்கி ஊக்கம் அளிக்க வேண்டும்.

**தகைமைகள்:**

**வெளிவாரி:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்ட வியாபார நிர்வாகம், வியாபார முகாமைத்துவம், பொது நிர்வாகம், பொது முகாமைத்துவம், பொருளியல், வர்த்தகம், விஞ்ஞானம் (உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல், உயிரியல் விஞ்ஞானம்), விவசாயம், சட்டம் என்பவற்றில் இளமாணிப் பட்டம்.

**மற்றும்**

இயைபுடைய துறையில் பட்டப் பின்படிப்பு அல்லது பதவிக்கு இயைபான விடயப்பரப்பில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் முகாமைத்துவ நிறுவனமொன்றின் கூட்டுவர்த்தக அங்கத்துவம்.

**மற்றும்**

முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தபட்சம் பதினெட்டு (18) வருடகால அனுபவம் இதில் ஐந்து (05) வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலாக இருத்தல் வேண்டும் அத்துடன் ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் கூட்டுத்தாபனம், சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனத்தின் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவு

**அல்லது**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்ட வியாபார நிர்வாகம், வியாபார முகாமைத்துவம், பொது நிர்வாகம், பொது முகாமைத்துவம், பொருளியல், வர்த்தகம், விஞ்ஞானம் (உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல், உயிரியல் விஞ்ஞானம்), விவசாயம், சட்டம் என்பவற்றில் இளமாணிப் பட்டம்.

**மற்றும்**

இயைபுடைய துறையில் கலாநிதிப் (PhD) பட்டம்

**மற்றும்**

குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் அனுபவம் அத்துடன் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் கூட்டுத்தாபனம், சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனத்தின் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவு மற்றும் முகாமைத்துவ அனுபவம்

**உள்வாரி:**

பதவிக்குரித்தான விடயப்பரப்பில் சிரேஷ்ட முகாமைத்துவ வகுதிப் பதவியில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் (05) திருப்திகரமாக சேவையாற்றியிருத்தல் வேண்டும்.

பல ஒழுக்காற்றுக் குழுக்களுக்கு தலைமை தாங்கும் மற்றும் வழிநடத்தும் நிரூபிக்கப்பட்ட ஆற்றல்.

மனித வளங்கள் மற்றும் ஏனைய வளங்களை முறையாக வரிசைப்படுத்தல் மற்றும் திறமையான முகாமைத்துவத்தில் அனுபவம்.

**வயது:**

35 வயதுக்கு குறையாமலும், 55 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**மேலதிகமாக**

**ஒவ்வொரு விண்ணப்பதாரரும்:**

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- பதவியின் கடமைகளைச் சிறப்பாகச் செய்ய உடல் மற்றும் உளத் தகுதியுடன் இருக்க வேண்டும் என்பதுடன் தீவின் எப்பாகத்திலும் கடமையாற்றுவதற்குத் தயாராகவிருத்தல் வேண்டும்.
- சிறந்த நன்னடத்தை கொண்டவராக இருக்க வேண்டும்.

**சம்பள அளவு** : HM 2-1: ரூபா (91,645- 12 x 2,700 – 124,045)

**போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவு:**

PED 1/2015, PED 1/2015 (i) மற்றும் (ii) சுற்றறிக்கை விதிகளின் பிரகாரம் 145 லீற்றர் எரிபொருள் கொடுப்பனவு மற்றும் 50,000.00 ரூபா மாதாந்த போக்குவரத்துக் கொடுப்பனவு அல்லது உத்தியோகபூர்வ வாகனத்தைப் பயன்படுத்துவதற்கான உரித்துடையவராகலாம்.

**தொழில்சார் கொடுப்பனவு:**

2017/05ஆம் இலக்க MSD சுற்றறிக்கை விதிகளின் பிரகாரம் ஒரு தொழில்சார் கொடுப்பனவு வழங்கப்படும்

**ஏனைய கொடுப்பனவுகள்:**

சம்பளத்திற்கு மேலதிகமாக வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் இயைபுடைய அரசாங்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொருந்தக்கூடிய ஏனைய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**நியமனத்தின் தன்மை:**

நிரந்தரமான நியமனத்துடன் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் உரித்துடையது.

**ஆட்சேர்ப்பில் சம்பளம்**

வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட நபர்கள் சம்பள அளவின் ஆரம்ப நிலையில் அமர்த்தப்படுவார்கள் என்பதுடன் உள்வாரியாக ஆட்சேர்க்கப்படுவோரின் சம்பளம் தாபனக் விதி கோவையின் VII அத்தியாயத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**உறுதிப்படுத்துதல்:**

வெளிவாரியாக நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரர் மூன்று வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்படுவார். தகுதிகாண் காலத்தின்போது அவரின் செயற்றிறன் மற்றும் நடத்தை என்பன திருப்திகரமாக இருந்தால் அவர் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார். ஒரு பதவியில் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்ட உள்வாரியாக தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர் ஒரு வருடம் செயல்பாட்டுக் காலத்திற்கு உட்படுத்தப்படுவார்.

**ஆட்சேர்ப்பு நடைமுறை:**

கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

**பின்வரும் வகையில் நேர்முகத் தேர்விற்கு புள்ளிகள் ஒதுக்கப்பட்டுள்ளன:**

| | | |
|---|---|---|
| • தொடர்புடைய மேலதிக அனுபவம் | - | 30 புள்ளிகள் |
| • தொடர்புடைய மேலதிக கல்வி / தொழில்சார் தகைமைகள் | - | 30 புள்ளிகள் |
| • ஏனைய சாதனைகள் | - | 15 புள்ளிகள் |
| • நேர்முகத் தேர்வில் காட்டும் செயற்றிறன் | - | 25 புள்ளிகள் |
| மொத்தம் | - | 100 புள்ளிகள் |

தகுதியான விண்ணப்பதாரர்கள் 2023-09-23ஆம் திகதி அல்லது அதற்கு முன் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் தங்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகிறார்கள். விண்ணப்பத்துடன் தகைமைகளை உறுதி செய்வதற்காக இயைபுடைய சான்றிதழ்களின் நகல் பிரதிகளும் இணைக்கப்படல் வேண்டும். அரசாங்கத் துறையில் பணிபுரியும் ஊழியர்களின் விண்ணப்பங்கள் நிறுவனத் தலைவர்களின் ஊடாக அனுப்பப்பட வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு இணங்காத விண்ணப்பங்கள், முழுமையற்ற விண்ணப்பங்கள் மற்றும் இறுதித் தேதிக்குப் பின் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஆதரவு திரட்டுதல் தகுதியின்மையாகக் கருதப்படும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி பின்வருமாறு.

**செயலாளர்,**
**வர்த்தகம், வணிகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு,**
**இல. 492, ஆர். ஏ. த மெல் மாவத்தை, கொழும்பு-03.**